# Cloud Backup Interim Report

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | Noolaham cloud storage solution |
| செயற்றிட்ட எண் | NF/PG/2025/0003 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | அரவணை |
| முக்கிய பங்குத்தாரர்கள் | |
| செயற்றிட்டச் செலவுகள் | |

செயற்றிட்ட அறிமுகம்

நூலக நிறுவனம் 2005 ஆம் ஆண்டிலிருந்து தற்காலம் வரை தன்னிடம் உள்ள ஆவணங்களை வன்தட்டு வழியாக பாதுகாத்து வருகின்றது. தற்போது நூலக நிறுவனத்திடம் இருக்கும் ஆவணங்கள் மொத்தமாக 544TB சேமிப்பு அளவுள்ள வன்தட்டுக்களை பராமரித்து வருகிறது. இவை மொத்தமாக 52 வன்தட்டுக்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ள நிலைமையில் வன் தட்டுக்களை பாதுகாத்தல் மற்றும் கையிருப்பில் உள்ள வன் தட்டுக்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வசதி வன் தட்டு ஒன்றின் செலவீனம் ஆகிய நடைமுறை சிக்கலாக உள்ளன. இவை வருங்காலத்தில் இன்னும் அதிகரிக்க கூடும். ஆகவே குறித்த நிலைமையினை கட்டுப்படுத்துவதற்காக பௌதீக அளவில் பேணிப் பாதுகாப்பதை விட Cloud இல் ஆவணங்களை பேணிப் பாதுகாத்தல் உச்ச பாதுகாப்பையும் செலவீனத்தை குறைப்பதாகவும், களஞ்சிய இடத்தை கட்டுப்படுத்துவதற்கும் உதவியாக அமையும்.

செயற்திட்ட இலக்கு

நூலக நிறுவனத்தினால் எண்ணிமப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் ஆவணங்கள் யாவும் வன் தட்டுக்களின் மூலம் சேமிக்கப்பட்டுள்ளன. அவ் ஆவணங்கள் அனைத்தும் Cloud இல் பதிவேற்றம் செய்யப்படல் வேண்டும். இதுவரை காலமும் 52 வன்தட்டுக்களில் 544TB அளவில் ஆவணங்கள் உள்ளன. இவற்றை இச் செயற்திட்டத்தின் மூலம் Cloud இல் பதிவேற்றம் செய்து முடிக்கப்படல் வேண்டும். அத்தோடு வருங்காலத்தில் நாம் எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் ஆவணங்களையும் Cloud இல் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

செயற்றிட்ட நோக்கம்

தரவை பாதுகாப்பது என்பது உலகளாவிய முயற்சியாகும், இந்த செயற்திட்டம் நூலகம் மற்றும் அரவணை ஆகிய அமைப்புக்களினூடாக செயற்படுத்தப்படுகின்றது. இந்த செயற்பாட்டின் மூலம் இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்களுடன் தொடர்புடைய கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முயற்சிகளை ஆதரிக்கவும், திறந்த மற்றும் இலவச அணுகலை உறுதி செய்யவும் அறிவு மற்றும் தகவல் சேவைகளை வழங்கவும் முடியும்.

நூலக நிறுவனம் எண்ணிம ஆவணங்களை பாதுகாப்பதில் பல சவால்களை சந்தித்துள்ளது. அவற்றில்,

- தரவு இழப்பு
- சேமிப்பக எல்லைகள்
- பாதுகாப்பு ஆபத்துகள்
- தொழில்நுட்ப பழுப்பு
- வளங்கள் பற்றாக்குறை
- சுற்றுச் சூழல் காரணிகள்

போன்றனவாகும்.

நூலக நிறுவனம் 2005 ஆம் ஆண்டிலிருந்து தற்காலம் வரை சேமித்து பாதுகாத்துள்ள ஆவணங்களை வன்தட்டுக்களில் பாதுகாத்து வருகின்றது.

குறிப்பாக, இந்த தரவுகளை பாதுகாப்பதில் ஏற்படும் சிக்கல்களை தவிர்க்கவே, நூலக நிறுவனமானது Amazon வழங்குகின்ற AWS Web Service இனை பயன்படுத்தி தகவல்களை பாதுகாக்க முயற்சிக்கின்றது.

செயற்றிட்ட அடைவு மட்டம்

| வன்தட்டு | மாதம் | பதிவேற்றப்பட்ட அளவு **TB** | செலவு |
|---|---|---|---|
| 01 (710-737) | ஜூலை | 3.03 | £ 4.73 |
| 02 (738-772) | ஆகஸ்ட் | 3.03 | £ 10.96 |
| 03 (773-797) | செப்டெம்பர் | 3.15 | £ 11.36 |
| 04 (798-812) | ஒக்டோபர் | 3.15 | £ 16.75 |
| 05 (813-840) | நவம்பர் | 2.74 | £ 22.51 |
| 06 (841-875) | டிசம்பர் | 2.45 | £ 31.87 |
| 07 (876-910) | ஜனவரி | 3.29 | £ 43.10 |
| 08 (911-945) | பெப்ரவரி | | £ 37.82 |

எதிர்கொண்ட சவால்கள்

- மின் தடை ஏற்படும் பொழுதுகளில் பதிவேற்றம் செய்வதற்காக இணைக்கப்பட்ட கணிணி செயலிழப்பதால் அத் தினத்திற்குரிய பதிவேற்றல் செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டிருக்கும்
- அலுவலகத்தில் உபயோகிக்கும் இன்டர்நெட் package மதிய நேரங்களில் அன்றாட வேலைகளை செய்வதனால் Cloud இல் பதிவேற்றம் செய்ய முடிவதில்லை.

ஆகையினால் இரவு நேரங்களிலேயே Cloud இல் பதிவேற்றம் செய்யும் செயற்பாடு நடைபெறுகின்றது.

- சில நாட்களில் Script run ஆகாமல் Error காணப்படும் ஆனாலும் அதற்குறிய தொழில்நுட்ப ஊழியர் இல்லாமையினால் அவ் Error ஏற்படுவதற்கான காரணத்தை கண்டறிய முடியாமல் இருக்கும்
- ஒரே அளவலினா Data தரவேற்றம் செய்யப்படாமை. அதாவது சில நாட்களில் அதிக அளவு Data தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது, சில நாட்களில் மிக குறைந்த அளவு Data தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

பின்னிணைப்பு
**https://tinyurl.com/3frxynj5**